# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 120/ந/2017

ஆணை எண். 196/2017

நாள் : 01/08/2017

**திரு டி. சன்முகம்,**
**விழுப்புரம் – 605 401.** – முறையீட்டு மனுதாரர்

**ஆணையாளர்,**
**விழுப்புரம் நகராட்சி,**
**விழுப்புரம்.** – எதிர் மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம் மற்றும் நகராட்சி, சாலமேடு, கிழக்கு வி.ஜி.பி. நகர், எண்.90, வள்ளுவன்–வாசுகி தெருவைச் சேர்ந்த திரு T.சண்முகம் அவர்களின் 25.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2017 அன்று பெறப்பட்டு 120/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விழுப்புரம் நகராட்சி, சாலமேடு, கிழக்கு வி.ஜி.பி. நகர், எண்.90, வள்ளுவன்–வாசுகி தெருவைச் சேர்ந்த திரு T.சண்முகம் என்பவர், தான் குடியிருக்கும் வீட்டுமனைத் திட்டத்திற்கு, 1973–ஆம் ஆண்டு திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது என்றும் அவ்வீட்டுமனைத் திட்டத்தில் மனை எண்.17–ஐ 1976–ஆம் ஆண்டு கிரயம் பெற்று 1990 ஆம் ஆண்டு முதல் அம்மனைப்பிரிவில் வீடுகட்டி குடியிருந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். மேலும், 2012–ஆம் ஆண்டு முதல் சாலமேடு, வள்ளுவன்–வாசுகி தெருவிற்கு சாலை அமைத்துத் தரக்கோரி மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத் தனிப்பிரிவு, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு முறையிட்டும், மனுதாரர் குடியிருக்கும் பகுதிக்கு சாலை அமைத்துத் தராத நிலையில் 25.05.2017 நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 13.07.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தான் குடியிருக்கும் அனுமதியளிக்கப்பட்ட வீட்டுமனைப்பிரிவில், 450 அடி நீள வள்ளுவன்–வாசுகி தெருவிற்கு சாலை அமைத்துத் தர பல ஆண்டுகளாக போராடி வருவதாகவும், பல்வேறு சமயங்களில் பல்வேறு கடிதங்கள் மூலம் இப்பகுதியில் சாலை அமைத்துத் தரப்படும் என விழுப்புரம் நகராட்சி நிர்வாகத்தினர் தெரிவித்தார்கள் தவிர சாலை அமைத்துத் தரவில்லை என்றும், எனவே தான் குடியிருக்கும் பகுதியில் சாலை அமைத்துத் தர ஆவண செய்யுமாறு விசாரணையின்போது கேட்டுக்கொண்டார்.

3. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்து விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கையும் பெறப்பட்டது. 23.05.2017 நாளிட்ட நகர்மன்றத் தீர்மானம் எண்.355–ல் வள்ளுவன்–வாசுகி தெருவில் ரூ. 8,60,000/– மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 04.05.2017 அன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது என்றும், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்யப்பட்டவுடன் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் குடியிருக்கும் சாலமேடு பகுதி, 31.01.2011 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.33–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் மூலம் விழுப்புரம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் தான் குடியிருக்கும் மேற்குறிப்பிட்ட சாலமேடு வள்ளுவன்–வாசுகி தெருவிற்கு சாலை அமைத்துத் தரக்கோரும் கோரிக்கையினை 2012–ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். 30.10.2015 நாளிட்ட விழுப்புரம் நகர்மன்ற அவசரக்கூட்டத் தீர்மானம் எண்.1817–ல் ரூ.8.60 இலட்சம் மதிப்பீட்டில் வள்ளுவன்–வாசுகி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு, 28.12.2015 நாளிட்ட மன்றத் தீர்மானம் எண்.1833–ல் திருமதி டி. சீத்தாலட்சுமி அவர்கள் அளித்த ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம் என்பதற்கு மன்ற ஒப்புதல் கோரப்பட்டு மன்றமும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

5. இந்நிலையில், 26–வது வார்டு நகர்மன்றஉறுப்பினர் திரு பருத்தி கா. சேகர் என்பவர், ஒப்பந்தப்புள்ளிக்கு மன்ற ஒப்புதல் அளித்த அதே 28.12.2015 நாளிட்ட கடிதத்தில், வள்ளுவன்–வாசுகி தெருவில் எந்தவித வசதிகளும் இல்லை. வீடும் இல்லை, ஆனால் அதற்கு அருகில் உள்ள ஆசான் மண்டபத் தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்டு முழுமை பெறாமல் உள்ள சாலையை மேற்கொண்டு நீட்டித்து சாலை அமைத்துத் தரவேண்டும் எனக்கோரியுள்ளார். அன்றைய நாளில் ஆணையாளர் பொறுப்பினை கூடுதலாக வகித்த பொறியாளர் மன்ற உறுப்பினரின் கோரிக்கையினை உடனடியாக ஏற்று, ஆசான் மண்டப சாலையை சீரமைக்க மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி அனுமதி வழங்கலாம் என்பதற்கு மன்றத் தலைவரின் அனுமதி பெறுவதற்கான அலுவலகக் குறிப்பினை 28.12.2015 ஆம் நாளிலேயே தாக்கல் செய்துள்ளார். இக்குறிப்பிற்கு நகர்மன்றமும் 22.09.2016 நாளிட்ட தீர்மானம் எண். 1994–ல் பின்னேற்பு அனுமதி வழங்கியுள்ளது.

6. வள்ளுவன்–வாசுகி தெருவில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு நகர்மன்றம் ஒப்புதல் வழங்கிய தொகை ரூபாய் 8.60 லட்சம் மேற்குறிப்பிட்ட தொகை மதிப்பீட்டிலேயே ஆசான் மண்டபத் தெருவில் முழுமை பெறாமல் இருந்த சாலையினை உறுப்பினர் திரு பருத்தி கா.சேகர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று சீரமைக்க ஆணையாளர் பொறுப்பில் இருந்த பொறியாளர் இசைவு அளித்து மன்றத்தின் ஒப்புதலையும் பெற்றுத் தந்துள்ளார். ஆசான் மண்டபத் தெருவில் மேற்கொள்ளப்பட்ட பணிக்கேற்ப நிதிமதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. இரண்டு

பணிகளுக்கும் ஒரே அளவான மதிப்பீடு என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. வள்ளுவன்–வாசுகி தெருவில் மேற்கொள்ளப்படவிருந்த சீரமைப்புப் பணியினை ஆசான் மண்டபத் தெருவிற்கு மாற்ற ஆணையாளர் பொறுப்பு பொறியாளர்கள் இசைவு அளித்தது ஒரு நடுநிலைமையான செயல் அல்ல. மன்ற உறுப்பினர் திரு பருத்தி கா. சேகரின் வற்புறுத்தலுக்கு நகராட்சி ஆணையர் உட்பட்டுள்ளார். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதற்கு நகராட்சி ஆணையாளர் / பொறியாளர் உரிய வழிகாட்டுதல்களை தெரிவிக்கவேண்டும். மன்ற உறுப்பினர்களின் வற்புறுத்தல்களுக்கு உட்படாமல் நடுவு நிலைமையோடு செயல் படுவதே நகராட்சி அலுவலர்களின் தலையாய கடைமை. இந்நேர்வு சம்பந்தப்பட்ட வள்ளுவன்–வாசுகி சாலையை சீரமைக்க 2012–ஆம் ஆண்டிலிருந்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆகியோரின் நடுவு நிலைமை தவறிய செயல்பாட்டினால் வள்ளுவன்–வாசுகி சாலையில் வசிக்கும் மக்களுக்கு சீரமைக்கப்பட்ட சாலையினை அனுபவிக்கும் நிலை இன்றைய நாள்வரை கைகூடவில்லை. தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிடவேண்டும் என்ற கருத்தினை:-

"நன்றே தரினும் நடுவு இகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறிய கூற்று அவர் பெயரைத் தாங்கி உள்ள வள்ளுவன்–வாசுகி சாலை சம்பந்தப்பட்ட நேர்வுக்கும் பொருந்தும். எனவே இனியும் காலம் தாழ்த்தாது மேற்குறிப்பிட்ட சாலையினை சீரமைப்பதற்கான பணியினை உடன் செயல்படுத்துமாறு விழுப்புரம் நகராட்சி ஆணையருக்கு / தனி அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 1–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**நகராட்சி ஆணையாளர்,**
**விழுப்புரம் நகராட்சி.**
**விழுப்புரம்.**

நகல் :
**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**